இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 235 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 23 – திங்கள்கிழமை 06 ஏப்ரல் 2026 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 235 : Thiruvalluvar Year - 2057 - Panguni 23 - Monday 06 April 2026 - Kovai ★★ 16 Pages ₹ 5.00





## 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று

# உதயசூரியன் ஆட்சி மீண்டும் உதித்திட ஆதரவு தாரீர்!

## நாகர்கோவில் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**நாகர்கோயில், ஏப். 6–**

**நாகர்கோயிலில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பிரமாண்டப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது "200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று உதயசூரியன் ஆட்சி மீண்டும் உதித்திட ஆதரவு தாரீர்" என்று பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.**

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.4.2026) காலை, நாகர்கோயிலில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து ஆற்றிய உரை வருமாறு :–

தமிழ்நாடு முழுவதும் சூரிய உதயத்தைப் பார்க்க மக்கள் அனைவரும் வரும் மாவட்டம் குமரி ! அப்படிப்பட்ட மாவட்டத்திற்கு, உதய சூரியன் ஆட்சி மீண்டும் உதிக்க வேண்டும் என்று ஆதரவு கேட்டு உங்களை எல்லாம் நான் பார்க்க வந்திருக்கிறேன்.

குமரிக்கு நான் அடிக்கடி வந்து கொண்டு தான் இருக்கிறேன். வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட நேரத்தில், ஓடோடி வந்து பார்த்திருக்கிறேன். அதேபோன்று, 2025 புத்தாண்டுக்கு முந்தைய நாள் நம்முடைய திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா கொண்டாட இங்கு தான் நான் வந்தேன். இப்போதுகூட, பிப்ரவரி மாத கடைசியில் நாகர்கோயிலுக்கு நான் வந்தேன். அதுவும் எப்படிப்பட்ட நிகழ்ச்சி தெரியுமா? மிகப்பெரிய சாதனை படைத்த அரசு நிகழ்ச்சி!

அதாவது, 3 லட்சத்து 12 ஆயிரத்து 82 பயனாளிகளுக்கு, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கும் ஒரு பிரமாண்டமான நிகழ்ச்சிக்கு வந்தேன்! மாவட்ட மக்கள் தொகையில் பாதி பேர் அன்று பயனாளிகள். உங்களுக்குத் தெரிந்து இதுவரை நாகர்கோயில் நகரத்தில் அந்த விழா போன்று ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறதா? சொல்லுங்கள். அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்தது கிடையாது. மிகப் பெரிய நிகழ்ச்சி மட்டுமல்ல, திராவிட மாடல் முதல் வெர்ஷனுடைய நிறைவான அரசு நலத்திட்ட நிகழ்ச்சியும் குமரி மாவட்ட நிகழ்ச்சிதான்! கிரிக்கெட்டில் கடைசி பந்தில் சிக்சர் அடிப்பது போன்று, குமரி மாவட்டத்தில்தான் அந்த நிகழ்ச்சியோடு, மேலும் பல நிகழ்ச்சிகளிலும் நான் கலந்து கொண்டேன்.

நாகர்கோயிலில் தெற்கு எல்லைப் போராட்ட நாயகர் மார்ஷல் நேசமணி அவர்களின் தளபதியான குமரிக் கோமேதகம் பொன்னப்ப நாடார் அவர்களுக்கு திருவுருவச் சிலையை நான் திறந்து வைத்தேன்.

அகஸ்தீஸ்வரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கான குடியிருப்புகளையும், குமரியில் தமிழர் பேரறிவுச் சிலையாக தலைவர் கலைஞர் அமைத்த திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நினைவாக அலங்கார வளைவையும் திறந்து வைத்தேன்.

கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோயில் வந்து சேரவே எனக்கு 2 மணி நேரம் ஆனது. காரணம், அப்படி ஒரு அன்பான வரவேற்பால் என்னை திக்குமுக்காட வைத்துப் பெருமைப்பட்டது குமரி மக்களான நீங்கள் தான்! ஒரு மாதம் சென்றதே தெரியவில்லை. அதற்குள், இதோ திரும்பவும் உங்களைப் பார்க்க வந்துவிட்டேன்.

### ஏழாவது முறையாக ஆட்சியில் அமர்த்த ரெடியா?

2026 சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏழாவது முறையாக ஆட்சியில் அமர்த்த நீங்கள் ரெடியா? திராவிட மாடல் 2.0வுக்கு குமரி மாவட்டம் ரெடியா?



திருவாரூர், திருச்சி, கரூர், ஈரோடு, கோவை, நெல்லை ஆகிய ஊர்களில் நான் பரப்புரையை முடித்துவிட்டுதான், இந்த மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் தயார் ஆகிவிட்டார்கள். 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று, திராவிட மாடல் நல்லாட்சி மீண்டும் அமைய வேண்டும் என்றால், குமரி மாவட்டத்தில் இருக்கும் எல்லாத் தொகுதியிலும் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற்றாக வேண்டும். நம்முடைய அந்த வெற்றி வேட்பாளர்களை இப்போது உங்கள் முன்னால் நான் அறிமுகப்படுத்தப் போகிறேன்.

முதலில், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் மாவட்டச் செயலாளர் சகோதரர் ஆர். மகேஷ் போட்டியிடுகிறார். நான் இளைஞரணியில் இருந்த காலத்தில் இருந்தே, என்னுடன் சேர்ந்து பயணித்தவர். நாகர்கோயில் மாநகராட்சி மேயராக இருந்து, நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து, மிகச் சிறப்பாக பணியாற்றிய மகேஷ் அவர்களுக்கு, கன்னியாகுமரி தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

அடுத்து, நாகர்கோயில் சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் எஸ்.ஆஸ்டின். கழகத்தின் துணை அமைப்புச் செயலாளராக பொறுப்பேற்று பணியாற்றிக் கொண்டிருப்பவர். சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும், மாநிலங்களவை உறுப்பினராக ஒரு முறையும் மக்கள் பணியாற்றியவர். சிறுபான்மைச் சமூக மக்களின் உரிமைக்காகத் தொடர்ந்து உழைப்பவர். சட்டமன்றத்தில் சிறப்பான வாதங்களையும், மக்களுக்கான கோரிக்கைகளையும் எடுத்து வைக்கும் ஆஸ்டின் அவர்களுக்கு, நாகர்கோயில் தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும்.

## F.C.R.A. சட்டம்: அ.தி.மு.க.வின் நிலைப்பாடு என்ன?

### 6 வேட்பாளர்களின் வெற்றி உறுதியாகிவிட்டது!

அடுத்து, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய பெருமதிப்பிற்குரிய இனிய சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் ராஜேஷ் குமார் அவர்கள். அதே தொகுதியில் 2 முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்து, உங்களுக்கு நன்றாக அறிமுகமானவர். சட்டமன்ற காங்கிரஸ் குழுவின் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர். இன்னும் சொன்னால் நான் சிலை திறந்து வைத்தேனே, விடுதலைப் போராட்ட வீரர் குமரிக் கோமேதகம் பொன்னப்ப நாடார் அவர்களின் அன்புப் பேரன். அது உங்களுக்குத் தெரியும். அப்படிப்பட்ட ராஜேஷ் குமாருக்குக் கை சின்னத்தில் கிள்ளியூர் மக்கள் மீண்டும் உங்கள் பொன்னான வாக்குகளை வழங்கிட வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் நமது வேட்பாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெருமதிப்பிற்குரிய சகோதரர் ராகுல் காந்தி அவர்களால் மீண்டும் இந்தத் தொகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் சகோதரி தாரகை கத்பர்ட் அவர்கள். மீனவப் பின்னணி கொண்டவர்! கன்னியாகுமரி மேற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவராக இருந்திருக்கிறார். இன்னும் சொன்னால், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் நியமிக்கப்பட்ட முதல் பெண் மாவட்டத் தலைவர் தாரகை கத்பர்ட் அவர்கள். 2024ஆம் ஆண்டு விளவங்கோடு இடைத்தேர்தலில் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர். இப்போது குளச்சல் தொகுதியில் போட்டியிடுகிறார். அவருக்கு குளச்சல் தொகுதி மக்கள் கை சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் நம்முடைய வெல்லும் வேட்பாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஆர்.செல்வசுவாமி அவர்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் அவர். ஏழுதேசம் பேரூராட்சித் தலைவராகப் பணியாற்றியவர். மக்களுக்காகவும், குறிப்பாக விவசாயிகளுக்காகவும் தொடர்ந்து போராடக் கூடியவர். அவருக்கு, பத்மநாபபுர மக்கள்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்